සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

16 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023 (2024)

| | | |
|---|---|---|
| ඉස්ලාම් I, II | | පැය තුනයි |
| இஸ்லாம் I, II | | மூன்று மணித்தியாலம் |
| Islam I, II | | Three hours |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## இஸ்லாம் I

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** "எத்தகைய சந்தேகத்திற்கும் இடமின்றி உறுதியாக நம்பி ஏற்றுக்கொள்ளல்" என்ற கருத்தைத் தரும் பதம்
(1) அகீதா (2) வஸீலா (3) அத்தஸ்கியா (4) அல்பிக்ஹு

**2.** 'ஜபீரத்' என்பதன் பொருள்
(1) தொடக்கு ஏற்படல் (2) காயத்தின் மீது போடப்பட்ட கட்டு
(3) தயம்முமின் உறுப்புக்கள் (4) உறுப்பில் நீரைத் தடவுதல்

**3.** உள்ளத்தோடு தொடர்பான 'இபாதத்கள்'
(1) உழ்ஹிய்யா, பொறுமை (2) அல் குர்ஆன் ஓதுதல், மனத்தூய்மை
(3) பொறுமை, இஹ்லாஸ் (4) நோன்பு, திக்ர்

**4.** தொழுகையில் 'துஆஉல் இஸ்திப்தாஹ்' என்பதாவது,
(1) சூறா பாத்திஹா ஓதுதல் (2) அத்தஹிய்யாத் ஓதுதல்
(3) தொழுகையில் துஆ செய்தல் (4) வஜ்ஜஹ்து ஓதுதல்

**5.** இஸ்லாமிய நோக்கில் ஒரு வியாபாரம் செல்லுபடியாவதற்குத் தேவையான அடிப்படைகளில் **அல்லாதது**,
(1) ஈஜாப் - கபூல் (2) இலாபத்தைக் குறிப்பிடுதல்
(3) வியாபாரப் பொருள் (4) விற்பவன் - வாங்குபவன்

**6.** இலங்கையில் இருந்து ஹஜ்ஜுக்காகச் செல்வோர் நிய்யத் வைக்கும் மீக்காத்
(1) மக்கா (2) துல் ஹுலைபா (3) கர்னுல் மனாஸில் (4) யலம்லம்

**7.** 'அல்கஸ்ரு வல்ஜம்உ' என்ற சொற் பிரயோகம் எந்த வணக்கத்தோடு தொடர்புடையவை?
(1) தொழுகை (2) ஸக்காத் (3) நோன்பு (4) ஹஜ்

**8.** இறந்த கணவனுக்காக இத்தா அனுஷ்டிக்கும் பெண் கட்டாயம் தவிர்த்துக் கொள்ள வேண்டிய விடயம்
(1) உழைப்புக்காகச் செல்லல் (2) திருமணம் முடித்தல்
(3) வைத்தியரை நாடுதல் (4) ஸுன்னத்தான நோன்பு நோற்றல்

**9.** "ஒரு நோன்பாளி இரண்டு சந்தர்ப்பங்களின் போது மகிழ்ச்சியடைகின்றான்" என்ற ஹதீஸில் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள்
(1) பிறை காணும்போதும், பெருநாள் கொண்டாடும்போதும் ஆகும்.
(2) நோன்பு திறக்கும்போதும், தன் இரட்சகனைச் சந்திக்கும்போதும் ஆகும்.
(3) நோன்பு திறக்கும்போதும், இரவு வணக்கத்தில் ஈடுபடும்போதும் ஆகும்.
(4) ஸஹர் உணவு உண்ணும்போதும், நோன்பு திறக்கும்போதும் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

10. மனைவி கணவனிடமிருந்து விவாக விடுதலை கோரிப் பெறுவது,
(1) தலாக் (2) பஸ்கு (3) குல்உ (4) ழிஹார்

11. ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டி நிய்யத் வைத்தவர் செய்ய அனுமதிக்கப்படாத ஒரு செயல்
(1) ஸுன்னத்தான தொழுகை தொழுதல் (2) மணம் பூசுதல்
(3) குளித்தல் (4) தூங்குதல்

12. தவ்பா (பாவமன்னிப்பு) செய்வதற்குரிய காலகட்டமாக எக்காலப்பகுதி கருதப்படுகின்றது?
(1) றமழான் மாதம் (2) வெள்ளிக்கிழமை
(3) காலவரையறையில்லை (4) ஹஜ்ஜுடைய காலம்

13. ஒரு முஸ்லிமின் சொத்துக்களைத் தூய்மைப்படுத்தும் வணக்கம் யாது?
(1) தொழுகை (2) ஸக்காத் (3) நோன்பு (4) ஹஜ்

14. நபியவர்களிடம் சிறந்த தொழில் எது? எனக் கேட்கப்பட்டதற்கு அவர்கள் பதிலாகக் கூறியது பின்வருவனவற்றுள் எது?
(1) கைத்தொழிலும், வேட்டையாடுதலும்
(2) கைத்தொழிலும், பொய் கலவாத வர்த்தகமும்
(3) பொய் கலவாத வர்த்தகமும், தரகர் தொழிலும்
(4) தரகர் தொழிலும், கைத்தொழிலும்

15. "நிச்சயமாக அல்லாஹ் இவரின் உள்ளத்திலும் நாவிலும் சத்தியத்தை வைத்துள்ளான்" என நபி (ஸல்) அவர்களால் சிலாகித்துக் கூறப்பட்ட ஸஹாபி
(1) உமர் (ரழி) (2) ஸஃத் இப்னு அபீவக்காஸ் (ரழி)
(3) உஸ்மான் (ரழி) (4) தல்ஹா (ரழி)

16. கீழ் குறிப்பிடப்படுபவர்களில் திருமணம் முடிப்பதற்கு தற்காலிகமாக தடை செய்யப்பட்டவர்
(1) மனைவியின் தாய் (2) மனைவியின் சகோதரி
(3) சகோதரியின் மகள் (4) சகோதரனின் மகள்

17. 'இல்ஹாத்' என்ற பதம் சுட்டுவது,
(1) இணை வைத்தல் (2) நயவஞ்சகம் (3) நம்பிக்கை மோசடி (4) நாத்திகம்

18. அரச அத்துமீறலில் இருந்து தமது ஈமானைப் பாதுகாத்த இளைஞர்களின் வரலாறு இடம்பெறும் சூறா
(1) சூறாதுல் பகரா (2) சூறாதுல் அஃராப்
(3) சூறாதுல் கஹ்ப் (4) சூறாதுல் ஹுஜுராத்

19. மனித உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்காக செய்யப்பட்ட மதீனா சாசனம் மற்றும் மக்னா காட்டா ஆகிய இரு சாசனங்களுக்கும் இடைப்பட்ட காலம்
(1) இரண்டு நூற்றாண்டுகள் (2) நான்கு நூற்றாண்டுகள்
(3) ஆறு நூற்றாண்டுகள் (4) எட்டு நூற்றாண்டுகள்

20. 'அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅ' என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் பெரும்பாவத்தில் ஈடுபட்ட ஒரு முஸ்லிம்
(1) பாவி ஆவான். (2) நயவஞ்சகன் ஆவான்.
(3) இறை மறுப்பாளன் ஆவான். (4) வெறுக்கப்பட்டவன் ஆவான்.

21. பின்வரும் அட்டவணையில் **'அ'** நிரலில் சில அறபுச் சொற்களும் **'ஆ'** நிரலில் அதற்கான தமிழ் கருத்துக்களும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) இல்ம் | A - நிர்ணயித்தல் |
| (2) குத்ரத் | B - அறிவு |
| (3) இராதத் | C - பேராற்றல் |
| (4) கத்ர் | D - நாட்டம் |

மேலே 'அ' நிரலுக்குப் பொருத்தமான விதத்தில் முறையே 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்படும்போது சரியாக அமையும் தெரிவு யாது?
(1) A B C D (2) B C D A (3) B D C A (4) D B C A

[பக். 3 ஐப் பார்க்க

**22.** அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்கள்
(1) துல்ஹஜ் பிறை 1, 2, 3
(2) துல்ஹஜ் பிறை 11, 12, 13
(3) துல்ஹஜ் பிறை 15, 16, 17
(4) துல்ஹஜ் பிறை 21, 22, 23

**23.** பின்வரும் ஹதீஸைப் பூரணப்படுத்துக.
"தொழுகையின் திறவுகோல் வுழூவாகும்,
சுவனத்தின் திறவுகோல் ........ ஆகும்"
(1) ஹஜ் (2) நோன்பு (3) ஸக்காத் (4) தொழுகை

**24.** கஃபதுல்லாஹ் (மஸ்ஜிதுல் ஹறாம்) இல் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை, எத்தனை தொழுகைகளுக்குச் சமமானது?
(1) ஒரு இலட்சம் (2) ஐம்பது ஆயிரம் (3) ஆயிரம் (4) ஐநூறு

**25.** பின்வரும் அட்டவணையில் 'அ', 'ஆ' நிரல்களில் உமர் (ரழி) அவர்களின் நிர்வாகப் பணிகளை இலகுபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட அலகுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) வாலி | A - தலைமைக் காரியதரிசி |
| (2) காதிப் | B - பொலிஸ் அதிகாரி |
| (3) காழி | C - ஆளுநர் |
| (4) ஸாஹிபுல் அஹ்தாத் | D - தலைமை நீதிபதி |

மேலே 'அ' நிரலுக்குப் பொருத்தமான விதத்தில் முறையே 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்படும்போது சரியாக அமையும் தெரிவு யாது?
(1) A B D C (2) B D A C (3) C A D B (4) D A C B

**26.** கலீபா உஸ்மான் (ரழி) காலத்தில் கிளர்ச்சிகளைத் தோற்றுவிப்பதில் மும்முரமாகச் செயற்பட்டவர்,
(1) முஸைலமா
(2) உத்பா
(3) அபூலஹப்
(4) அப்துல்லாஹ் இப்னு ஸபாஃ

**27.** நபி (ஸல்) அவர்களின் கூற்றின் அடிப்படையில், ஒரு மனிதன் செலவிடும் தீனார்களில் மிகவும் சிறந்தது
(1) தனது குடும்பத்திற்காகச் செலவிடுவது
(2) வழிப்போக்கருக்காகச் செலவிடுவது
(3) அண்டை வீட்டாருக்காகச் செலவிடுவது
(4) பொதுப் பணிக்காகச் செலவிடுவது

**28.** திருமணத்தில் பொறுப்புதாரியாக (வலி) இருப்பதற்குப் பொருத்தமற்றவர்
(1) தாயின் சகோதரன் (2) தந்தை (3) தந்தையின் தந்தை (4) நீதிபதி

**29.** ஆடுகளில் ஸக்காத் விதியாவதற்கு ஒருவரிடம் இருக்க வேண்டிய ஆடுகளின் குறைந்த எண்ணிக்கை
(1) 10 (2) 20 (3) 25 (4) 40

**30.** இஸ்லாத்தின் பார்வையில் ஒரு மனிதன் உயர்வை அடைவது
(1) பொருளாதாரத்தின் மூலம்
(2) குடும்ப செல்வாக்கின் மூலம்
(3) இறையச்சத்தின் மூலம்
(4) அழகான தோற்றத்தின் மூலம்

**31.** ஈமான் எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது. அதில் மேன்மையானது 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவாகும், மிகவும் தாழ்ந்தது எது என நபி (ஸல்) குறிப்பிட்டார்கள்?
(1) வெட்கப்படுதல்
(2) புன்னகைத்தல்
(3) விருந்தளித்தல்
(4) பாதையில் இடர் தரும் பொருட்களை அகற்றல்

**32.** பின்வரும் பதங்களைக் கருதுக.

| | | |
|---|---|---|
| A - அல் - பித்யா | D - அல் - கிரான் | G - ஸுஹ்த் |
| B - தஸ்கிய்யா | E - தவ்பா | H - வஹி |
| C - இஃலாஸ் | F - அர்ரிபா | I - வரஉ |

மேற்படி அட்டவணைக்கு அமைய ஆன்மீக மேம்பாட்டுக்கான இஸ்லாமிய வழிகளை மாத்திரம் குறிக்கும் சொற்றொகுதி
(1) A B C D E (2) A C D F G (3) B C D E F (4) B C E G I

28895

**33.** பின்வரும் அட்டவணையில் 'அ' நிரலில் நபிமார்களின் பெயர்களும் 'ஆ' நிரலில் அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) மூஸா (அலை) | A - நோயாளியைத் தடவி சுகப்படுத்தல் |
| (2) இப்றாஹீம் (அலை) | B - கற்பாறையில் இருந்து ஒட்டகம் வெளியாகியமை |
| (3) ஸாலிஹ் (அலை) | C - நெருப்பு சாந்தியளிக்கும் குளிராக மாறல் |
| (4) ஈஸா (அலை) | D - கைத்தடி பாம்பாக உருவெடுத்தல் |

மேலே 'அ' நிரலுக்குப் பொருத்தமான விதத்தில் முறையே 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்படும்போது சரியாக அமையும் தெரிவு யாது?

(1) B A C D (2) B C D A (3) C B A D (4) D C B A

**34.** 'பிக்ஹுல் அவ்லவிய்யாத்' எனப்படுவது

(1) சட்டக் கலை
(2) இஜ்திஹாத் கலை
(3) முதன்மைப்படுத்தப்படவேண்டியவை பற்றிய சட்டநோக்கு
(4) தொல்லியல் பற்றிய நோக்கு

**35.** நோன்பு நோற்பதற்கு ஹராமான நாட்களில் ஒன்று

(1) ஈதுல் பித்ர் நாள் (2) தனது திருமண நாள்
(3) கொண்டாட்ட நாள் (4) பிரயாண நாள்

**36.** 'ஸப்உ முஅல்லகாத்' எனும் சொற்றொடர் குறிப்பது

(1) கவிதைத் தொகுப்பு (2) வரலாற்றுத் தொகுப்பு
(3) கலைகள் பற்றிய தொகுப்பு (4) புராணங்கள் பற்றிய தொகுப்பு

**37.** "ஓர் அந்நிய ஆணும் பெண்ணும் தனித்திருக்கும்போது அவர்களோடு ஷைத்தானும் இருப்பான்" என்ற கூற்றானது

(1) அல்குர்ஆனின் கூற்று (2) நபியவர்களின் கூற்று
(3) ஒரு ஸஹாபியின் கூற்று (4) ஓர் அறிஞனின் கூற்று

**38.** நபி (ஸல்) அவர்களால் அல் - குர்ஆனை எழுதுமாறு பணிக்கப்பட்டவர்கள்

(1) அஹ்லுஸ்ஸுப்பாக்கள் (2) அன்ஸாரிகள்
(3) குத்தாபுல் வஹி (4) ஹாபிழுல் குர்ஆன்

**39.** ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள், மீக்காத்களில் எறிவதற்காக தமக்கு கற்களை சேகரித்து வரும்படி இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம் வேண்டிக் கொண்டபோது, அவர்கள் கொண்டு வந்த கற்கள்

(1) சிறிய கற்கள் (2) பெரிய கற்கள் (3) பாறாங் கற்கள் (4) கூழாங் கற்கள்

**40.** பின்வரும் இரு சொற்குழுக்களையும் கருத்திற்கொள்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) முஷாரகா | A - விவாகம் |
| (2) தலாக் | B - ஹஜ், உம்ரா |
| (3) ஸஃயு | C - சட்ட மூலாதாரம் |
| (4) இஜ்மாஉ | D - வியாபாரம் |

மேலே 'அ' நிரலுக்குப் பொருத்தமான விதத்தில் முறையே 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்படும்போது சரியாக அமையும் தெரிவு யாது?

(1) A C D B (2) B C D A (3) D A B C (4) D C A B

* *

[பக். 5 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

16 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| ඉස්ලාම් | I, II |
| இஸ்லாம் | I, II |
| Islam | I, II |

## இஸ்லாம் II

※ **முதலாம்** வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் தெரிவுசெய்த ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) நஜீஸான பிராணியாக இருந்தாலும், அதை வதை செய்வதற்கு இஸ்லாம் தடை விதித்துள்ள **இரண்டு** பிராணிகளைக் குறிப்பிடுக.

(ii) ஷாபி மத்ஹபின் அடிப்படையில், குனூத் ஓதுவது ஸுன்னத்தாக்கப்பட்ட **இரண்டு** தொழுகைகளைத் தருக.

(iii) 'பய்அதுஷ் ஷஜரா' என்னும் ஒப்பந்தத்தின் மற்றொரு பெயர் என்ன?

(iv) இஸ்லாமிய கலைகளில் முதலில் தோன்றிய கலையைக் கூறி, அக்கலையின் பொற்காலம் எதுவென்பதையும் குறிப்பிடுக.

(v) அபூபக்ர் (ரழி) அவர்களுக்கு 'அஸ்ஸித்திக்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கக் காரணம் யாது?

(vi) கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் முக்கிய பணிகளில் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vii) இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பகாலக் குடியேற்றங்கள் இடம்பெற்ற நகரங்களில் **இரண்டைத்** தருக.

(viii) இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளில் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) நிரந்தர மஹ்ரம் ஏற்படுவதற்கான காரணிகளில் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) ஒரு சிலர் உழைப்பதில் அசிரத்தையாக இருப்பதற்கான காரணங்கள் என இமாம் மாவர்தி குறிப்பிடும் காரணங்களில் **இரண்டைத்** தருக.

**2.** (i) ஷிர்க்கின் பிரதான பிரிவுகள் **இரண்டையும்** உதாரணங்களுடன் தருக.

(ii) ஈமானைப் பாதிக்கும் விடயங்களில் **மூன்றைச்** சுருக்கமாக விளக்குக.

(iii) தொழுகையில் பேணுதலாக இருக்கும் ஒரு முஃமின் பெறும் பயன்களில் **ஐந்தைச்** சுருக்கமாக விளக்குக.

**3.** (i) நபி (ஸல்) அவர்களால் சுவர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட பத்து ஸஹாபாக்களுள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) 'ஸிஹாஹுஸ் ஸித்தா' என்று அழைக்கப்படும் **ஆறு** ஹதீஸ் கிரந்தங்களின் பெயர்களையும் எழுதுக.

(iii) 'ஸுன்னா' என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு, அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்பதற்கான அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் **ஒவ்வொன்று** வீதம் தருக.

**4.** (i) வரலாற்றில் தோன்றிய போலி நபிமார்களில் **இருவரின்** பெயர்களைத் தருக.

(ii) நோன்பினால் ஏற்படும் இம்மை மறுமைப் பயன்களில் **மூன்று** வீதம் குறிப்பிடுக.

(iii) புனித கஃபாவின் வரலாற்றைச் சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

5. (i) ஸக்காத் பெறுவதற்கு தகுதியற்றவர்களில் இரு பிரிவினர்களைக் குறிப்பிடுக.
   (ii) ஸூறா லுக்மானில் குறிப்பிடப்பட்டுள்ள நற்பண்புகளில் மூன்றைக் குறிப்பிடுக.
   (iii) ஸஹாபாக்கள் தொடர்பான அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதாவைச் சுருக்கமாக விளக்குக.

6. (i) நான்கு முஸ்லிம்களை வணிக ஆலோசகர்களாக நியமித்த பொலன்னறுவை காலப் பிரிவைச் சேர்ந்த மன்னன் யார்?
   (ii) இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்பே அரேபியர்கள் இலங்கையை தங்கு தளமாகப் பயன்படுத்தியமைக்கு ஏதுவான காரணங்களில் மூன்றைக் குறிப்பிடுக.
   (iii) 'இஸ்லாமிய அடிப்படைக் கடமைகள் எவ்வாறு நல்லொழுக்கங்களின் பால் ஈர்க்கப்படுவதற்கு பயிற்றுவிக்கின்றன' என்பதைச் சுருக்கமாக விளக்குக.

7. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) இமாம் ஷாபிஈ (றஹ்)
   (ii) உணவுப்பழக்கம் தொடர்பான இஸ்லாமிய அறிவுரைகள்
   (iii) கலீபா அலி (றழி) அவர்களின் ஆளுமைப் பண்புகள்
   (iv) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முஸ்லிம்களின் பங்களிப்புகள்

❊ ❊ ❊